கடிதம் எழுதுவது, நேரடியாக அங்குள்ள அமைச்சர்களோடு கலந்து பேசுவது இப்படித்தான் நாங்கள் வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். உண்மையான காலதாமதத்தைப் போக்க வேண்டும் என்ற நல்ல உணர்ச்சி மத்திய அரசுக்கு விரைவிலே ஏற்படும் என்று நம்புகிறேன்.

தொழில் வளர்ச்சிக்கென தனி நில ஆர்ஜிதச் சட்டம்

*** 327 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தொழில் வளர்ச்சியைத் தீவிரப்படுத்தும் பொருட்டு 'தனி நில ஆர்ஜிதச் சட்டம்' இயற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம். தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்காக, "மாராட்டிய தொழில் வளர்ச்சிச் சட்டம், 1961" அடிப்படையில் நில ஆர்ஜிதம் செய்வதற்கான சட்டம்பற்றிய ஒரு செயற்குறிப்புப் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இது எப்பொழுது நிறைவேறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பரிசீலனை முடிந்ததற்குப் பின்னாலே.

திரு. கே. பி. எஸ். மணி : தற்காலிகமாகக் கிராமாந்திரங்களில் சிறு கைத் தொழில்களை ஆரம்பிக்கின்றவர்களுக்குப் பஞ்சாயத்து போர்டு, பஞ்சாயத்து யூனியன்களுக்கு உள்ள சிறிய இடங்களை ஆர்ஜிதம் செய்துகொள்ள யூனியன் அல்லது டி.டி.சி-க்கு அனுமதி கொடுக்குமா அரசாங்கம்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நில ஆர்ஜிதச் சட்டத்தின்கீழ் இப்பொழுது செய்து வருகிறோம். கடைசியாக இதை இப்பொழுது ரெவின்யூத் துறை நிறைவேற்றி வருகிறது. புதிய சட்டப்படி தொழில் வளர்ச்சிக்கு என்று தனியாக ஒரு நடைமுறை, ப்ரொஸீஜர், பின்பற்றினால் எளிதான முறையில் தாமதமின்றி உடனடியாக நிலங்கள் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்குமா என்பதுபற்றி இந்தச் சட்டத்தில் ஆராய்ச்சி செய்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமங்கள்தோறும் இதைச் செய்வதற்கு என்ன முறைகளைப் பின்பற்றலாம் என்பதைச் சட்டத்தை உருவாக்கும்பொழுது ஆலோசித்து வருகிறோம்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : இந்த நில ஆர்ஜிதச் சட்டம் என்றால் என்ன? அதற்கு விளக்கம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டம் வரும்பொழுது விளக்கமாகப் பேசலாம்.

Driving Schools

* 328 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal pending before the Government to start driving schools by the traffic police in Tamil Nadu; and